
## சிந்தனைக்கு



நாங்கள் ஒரு உன்னத இலட்சியத்திற்காகப் போராடிவருகிறோம். அந்த இலட்சியத்திற்காக உழைப்பதும் வாழ்வதும் எங்களுக்கு பூரண ஆத்ம நிறைவைத் தருகிறது.

தமிழீழத் தேசியத் தலைவர்.


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
27.03.2009



தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23ela@yahoo.com


# தவறான தகவலும், மதிப்பீடும்

சிறிலங்கா இராணுவத்தால் யுத்தத்தை முடிவிற்குக் கொண்டுவர முடியாமை குறித்துப் பலருக்குத் தற்பொழுது ஆச்சரியம் ஏற்பட்டுள்ளது. ஏனெனில் சிறிலங்காவிலும் வெளியிலும் - குறிப்பாக இந்திய ஆய்வாளர் பலருக்கும் யுத்தம் இதுவரையில் முடிவுகாணப்பட்டதொன்றாக இருத்தல்வேண்டும். அதாவது அவர்களின் காலநிர்ணயங்களையும், எதிர்பார்க்கைகளையும் மீறியதாக நீண்டு செல்வதாகவுள்ளதோடு, சிறிலங்கா இராணுவத்தால் வெல்லமுடியுமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

இனப்பிரச்சினை ஒன்றிற்கு இராணுவத் தீர்வு சாத்தியமில்லை என்று வரலாறு நிருபணம் செய்திருந்தபோதும் அதனைச் சிறிலங்கா ஆட்சியாளர்களும் யுத்தத்தில் சிறிலங்காவிற்கு ஆதரவு அளித்தோரும் - நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. அவர்கள் வரலாற்றைத் தம்மால் மாற்றியமைத்துவிடலாம் என எண்ணினர். யுத்தத்தின் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகண்டுவிடலாம் என நம்பினர்.

இதனை ஆட்சியாளர்கள் மட்டுமல்ல, ஆய்வாளர்கள் பலரும் நம்பினர். ஆனால் போர் இதுவரையில் முடிவிற்கு வரவில்லை என்பது வெளிப்படத் தொடங்கியதும் - தமது அபிப்பிராயங்களை அவர்கள் மாற்றிக் கொண்டார்களோ இல்லையோ, முடிவிற்குவராமை குறித்த காரணங்களைத் தேடத்தொடங்கியுள்ளனர்.

இந்தவகையில் இந்தியாவின் முன்னாள் இராணுவ அதிகாரியும் அரசியல் - இராணுவ விமர்சகருமான கேணல் ஹரிகரன் அபிப்பிராயப்படி விடுதலைப் புலிகளின் தலைவர் இன்னமும் மனம் தளராது உறுதியுடனேயே இருக்கின்றார் என்பதாகும். அதாவது தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் மனம் தளராமல் போராட்டத்தை வழிநடத்துவதே யுத்தத்தில் இதுவரை வெற்றிபெற முடியாமைக்குக் காரணம் என்பதாகும்.

அடுத்ததாக இலங்கை தொடர்பான விடயத்தில் பல கட்டுரைகளை எழுதியுள்ள ஆய்வாளரான சூரிய நாராயணன் என்பவர் ஊடகங்களின் கருத்துப்படி யுத்தத்தை முடிவிற்குக்கொண்டுவர முடியவில்லை /வெற்றிபெற முடியவில்லை எனத் தெரிவிக்கின்றார். அதாவது ஊடகங்கள் போர் குறித்துத் தவறான தகவல்களை வெளியிட்டிருந்தன என்பதாகவுள்ளது.

ஆனால், இவ்விரண்டு விமர்சகர்களும் சிறிலங்கா அர சாங்கம் கூறிக்கொண்டதுபோலவும் பேரினவாத ஊடகங் கள் தெரிவித்தமைபோன்றும் யுத்தம் முடிவிற்கு வந்துவி டும். சிறிலங்கா இராணுவம் வெற்றிபெற்றுவிடும் என்று நம்பியவர்களே ஆகும். இவர்கள் இன்று காரணம் தேடுவ தென்பது தமது மதிப்பீடுகளையும், தோல்விகளையும் மறைப்பதற்கான முயற்சிகளே ஆகும்.


ஏனெனில் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு ஒன்று சாத்தியமாகமாட்டாது என்ற வரலாற்றுப் பாடத்தைத் தான் இவர்கள் புறம்தள்ளினாலும் தமிழ் மக்களின்/விடு தலைப்புலிகளின் போராட்ட வரலாற்றை அவர்கள் புறம் தள்ள முற்பட்டமையும் அதில் இருந்து அவர்கள் கற்றுக் கொள்ளமுற்படாமையும் அவர்களின் தவறான மதிப்பீட் டிற்குக் காரணமாகும்.

தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர் களின் மனவுறுதி எத்தகையதென்பதற்குக் கடந்த முப்ப தாண்டுகால வரலாற்றில் பல எடுத்துக்காட்டுக்கள் உண்டு. குறிப்பாக இந்திய இராணுவத்துடன் போரிடுவதெனத் தீர்மானித்ததும் இந்திய இராணுவத்துடனான போரில் தளராது தாக்குப்பிடித்தமையும் அவரது மனவுறுதிக்கு எடுத்துக்காட்டாகும். அதாவது அச்சுறுத்திப் பணிய வைத்துவிடமுடியாது என்பதை எவரும் புரிந்துகொள்ளத் தக்கதான எடுத்துக்காட்டாகும்.

இதனைத் தவிர யுத்த களம் முழு அளவில் தமக்குச் சாதகமானதாக இருந்திருப்பின் மகிந்த ராஜபக்ச அரசாங் கங்கள் ஊடகங்கள் மீதும், ஊடகவியலாளர்கள் மீதும் மோசமான அடக்குமுறையைக் கைக்கொண்டிருக்க வேண்டியதான தேவை ஏற்பட்டிருக்கமாட்டாது. இத்த கைய நிலையில் ஊடகங்களிடம் இருந்து பெரிதாக எதிர் பார்ப்பதற்கு இல்லை என்பது மட்டுமல்ல, அரசிற்கு ஆதர வான குரல்களாகவே அவை ஒலிக்கவேண்டிய நிர்ப்பந் தத்திலும் இருந்தன. இத்தகைய நிலையில் ஊடகங் களை வைத்து நிலைமையை மதிப்பிடுதல், அதிலும் பேரினவாத ஊடகங்களை வைத்து மதிப்பிடுதல் என்பது தவறான முடிவிற்கே இட்டுச்செல்லத்தக்கதாகும்.

இவற்றை உணர்ந்துகொள்ளாமலும் மதிப்பீடு செய் யாமலும் யுத்தத்தில் சிறிலங்கா இராணுவம் வெற்றி பெற்றுவிடப்போவதாக நம்பிக்கைகொள்வதும் பின்னர் தமது மதிப்பீட்டுத் தவறுக்கு நியாயம் கற்பிக்க முற்படு வதும் அழகானதொன்றல்ல. ஒருவகையில் பார்க்கப் போனால் அவர்களின் அபிலாசைகளும் தோற்றுப் போன நிலையில் அதற்கு நியாயம் தேட முற்படுவ தாகவே இதனைக் கொள்ளமுடியும்.

## சிந்தனைக்கு



சிங்களப் பயங்கரவாதம் எமது தேசிய ஆன்மாவில் விழுத்திய வடுக்கள் என்றுமே மாறப்போவதில்லை.

தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
26.03.2009

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23ela@yahoo.com

# வரலாறு மன்னிக்காது!

சிறிலங்கா அரசாங்கம் இனப்படுகொலை நடவடிக்கைகளைத் தொடர்ந்த வண்ணமே உள்ளது. நாளாந்தம் 50 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டும், 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தும் வருகின்றனர். உலகில் அண்மைய ஆண்டுகளில் இத்தகைய தொடரான இன அழிப்பு நடவடிக்கை வேறு எங்கும் இடம்பெற்றதாகத் தெரியவில்லை.

இவ் இனஅழிப்பு நடவடிக்கையை ஆரம்பத்தில் கண்டுகொள்ளாமலும், பின்னர் அதனை ஓரளவு விளங்கிக் கொண்டுள்ளபோதும், இதனைச் சர்வதேசம் தடுத்துநிறுத்த முன்வரவில்லை . அன்றி சர்வதேசத்தின் தரப்பில் எடுத்துக்கொள்ளப்பட்ட முயற்சிகள் போதுமானதாக இல்லை.

அவ்வாறு இல்லாதுவிடில் சர்வதேசத்தின் நிர்ப்பந்தத்திற்குச் சிறிலங்கா பணிந்திருத்தல்வேண்டும். அன்றி சிறிலங்காவைச் சர்வதேசம் பணியவைத்திருத்தல் வேண்டும். ஆனால், அவ்வாறு எதுவும் நடந்ததாக இல்லை. ஒருவகையில் பார்க்கப்போனால் சிறிலங்கா அரசு சர்வதேச சமூகத்திற்குச் சவால் விடுவதுபோன்று நடந்துகொண்டுள்ளது.

சிறிலங்கா அரசிற்கு இத்தகைய துணிவு எவ்வாறு வந்தது? சிறிலங்காவைத் தாங்கிப்பிடித்திருப்பது யார்? என்பவையெல்லாம் இன்று கேள்விக்குரிய விடயங்களாக இல்லை. அவை பொதுவில் விளங்கிக்கொள்ளத்தக்கவையாகவும் வெளிப்படையாக அறியப்பட்டவையாகவுமே உள்ளன.

சிறிலங்கா அரசின் இவ் இனஅழிப்பு நடவடிக்கையானது தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தைத் தோற்கடிப்பதற்கு வழிவகுக்குமா? அன்றி அதனையும் மீறி தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டம் வெற்றி பெறுமா? என்பவை ஒருபுறம் இருக்க இன்று இன அழிப்பிற்கு ஆதரவு தெரிவிப்போர் அதனைக் கண்டும் காணாது இருப்போர் அதனைத் தடுத்துநிறுத்த வலுவுள்ளோர் - இவர்கள் தமிழர்களாக இருப்பினும்சரி - பின்னர் தாம் செய்த வரலாற்றுத் தவற்றினை களையமுடியாதவர்களாகவே இருப்பர்.

ஏனெனில், தமிழ் இனம் இலங்கையில் மட்டும் முடங்கிப்போயுள்ள ஓர் இனமல்ல. ஒருபுறத்தில் தமிழகத்தில் ஒரு தொகுதி தமிழர்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். இதனைத்தவிர உலகின் பல்வேறு பகுதிகளிலும் தமிழர்கள் சிறிய தொகுதியினரானாலும் பரந்துபட்டு வாழ்கின்றனர்.

இன்று ஐரோப்பாவிலும், வடஅமெரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து போன்ற நாடுகளிலும் ஈழத்தமிழ் மக்களுக்காக நடத்தப்படும் போராட்டங்களிலிருந்தே புலம்பெயர் நாடுகளில் ஈழத்தமிழர்கள் வகிக்கத்தக்கதான பாத்திரத்தைப் புரிந்துகொள்ளமுடியும்.

இத்தகையதொரு நிலையில் ஈழத்தமிழர்களை ஆதரித்தவர்கள், கைவிட்டவர்கள், காட்டிக்கொடுத்தவர்கள் வரலாற்றில் அடையாளம் காணப்படுவது ஒன்றும் கடினமான காரியமல்ல. இன்றைய பூகோள அரசியல், பிராந்திய அரசியல், அதிகார அபிலாசைகள் என்பன காரணமாக ஈழத்தமிழருக்கு எதிராக இன்று பலராலும் இழைக்கப்படும் தவறுகள் வரலாற்றுத் தவறுகளாகவே [illegible]. இதற்காக வரலாற்றில் இவர்கள் குற்றம் சாட்டப்படுவது தவிர்க்கப்பட முடியாததாகவே இருக்கும்.

வரலாற்றில் துரோகம், பழி என்பனவெல்லாம் சாதாரணமானதுதான். இவை வரலாற்றைத் திசைதிருப்பியதும் உண்டுதான். ஆனால் எவருமே துரோகத்திற்கான நியாயப்படுத்தலில் வெற்றி கண்டதில்லை. குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுபட்டதும் இல்லை. வரலாறு இவர்களை மன்னித்ததும் இல்லை.